விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Sri Lanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: நான்கு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 சித்திரை 08 சனிக்கிழமை (21.04.2007) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 123

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆ... கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

# பேச்சுவார்த்தையை ஆரம்பிக்குமாறு ஜனாதிபதியிடம் பாப்பரசர் கோரிக்கை

## மனித உரிமைகளை மதிக்குமாறும் வலியுறுத்தல்

(வத்திக்கான்)

மனித உரிமைகள் மதிக்கப்படுவதும் மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிப்பதுவுமே இலங்கையில் இடம் பெற்று வரும் வன்முறைகளை முடிபுக்குக் கொண்டுவர ஒரே வழி என பாப்பரசர் 16 ஆவது பெனடிக் தெரிவித்துள்ளார்.

நேற்று வத்திக்கான் சென்பீற்றர் சதுக்கத்தில் பாப்பரசரை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சந்தித்த போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (04 ஆம் பக்கம் பார்க்க)



## விடுதலைப்புலிகள் மீது தடைவிதிக்க கிறீஸ் அரசாங்கத்திடம் கோரிக்கை

(கொழும்பு)

கிறீஸ் நாட்டுக்குச் சென்றுள்ள வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம விடுதலைப்புலிகள் மீது தடைவிதிக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்துள்ளார். அத்துடன் சர்வதேச நாடுகள் தமது மக்களுக்கு இலங்கை தொடர்பான பயண எச்சரிக்கை விடுக்கும்போது வடக்குக் கிழக்குத் தவிர்ந்த ஏனைய பகுதிகள் பாதுகாப்பானவை என சுட்டிக்காட்ட வேண்டுமெனவும் ரோஹித போகொல்லாகம கிறீஸ் வெளிவிவகார அமைச்சரைக் கேட்டுள்ளார்.

இதற்குப் பதிலாக கிறீஸ் வெளிவிவகார அமைச்சர் மடம் டோரா போகயானிஸ் இலங்கை அரசாங்கத்துடன் தாம் முழு அளவில் ஒத்துழைப்பதுடன் (04 ஆம் பக்கம் பார்க்க)

## வெருகலாற்றுப் பகுதிக்கு பிரதம நீதியரசர் விஜயம்

(கொழும்பு)

பிரதம நீதியரசரான சரத் என் சில்வா தனது குடும்பத்தினருடன் அண்மையில் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்ட மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள வெருகல் ஆற்றுப் பகுதிக்கு சுற்றுப் பயணம் சென்றுள்ளார். இப் பயணத்தின் போது அவர் தற்போதைய நிலைமைகள் குறித்தும் மக்களை மீளக் குடியமர்த்துவதில் உள்ள நடைமுறைச் சிக்கல்கள் குறித்தும் 22 ஆம் படையணியின் தளபதி மேஜர் ஜெனரல் மலிந்த பீரிசிடம் விவாதித்துள்ளார்.

சிறிய குன்றின் மீது அமைந்திருந்த விடுதலைப்புலிகளால் பயன்படுத்தப்பட்ட ஒலிபரப்பு நிலையத்துக்கு அவர் சென்றதுடன் அதிலுள்ள 2 ஆயிரம் (04 ஆம் பக்கம் பார்க்க)

## வெற்றிலைக்கேணியிலும் விமானத் தாக்குதல்

(கொழும்பு)

வெற்றிலைக் கேணி மேற்குப் பகுதியில் விமானப்படையினர் நேற்று முன்தினமிரவு வான் தாக்குதல் நடத்தியுள்ளனர். விடுதலைப் புலிகளின் இனங்காணப்பட்ட இலக்குகள் மீதே இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக விமானப்படை தெரிவித்துள்ளது. இத் தாக்குதலின் போது புலிகளின் முகாம்கள் தாக் கியழிக்கப்பட்டுள்ளதாக தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (ச-5)

## இராணுவத் தளபதி யாழ்.விஜயம்

(யாழ்ப்பாணம்)

இராணுவத்தளபதி லெப்.ஜெனரல் சரத் பொன்சேகா யாழ்.குடாநாட்டுக்கான பயணமொன்றை மேற்கொண்டு படை அதிகாரிகளுடன் முக்கிய ஆலோசனைகளை நடத்தியுள்ளார்.

நேற்று முன்தினம் பலாலி விமான நிலையத்திற்குச் சென்ற சரத் பொன்சேகா படை அதிகாரிகளுடன் மகாநாடு ஒன்றை நடத்தியுள்ளார். மகா (04 ஆம் பக்கம் பார்க்க)

## பொருட்களுக்கான விற்பனை விலை ஒரு வாரத்தினுள் நிர்ணயிக்கப்படும்

### அரச அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் அத்தியாவசியப் பொருட்களுக்கான விற்பனை விலைகள் ஒருவாரத்தில் நிர்ணயிக்கப்படுமென யாழ்.அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்துள்ளார். நேற்று யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற குடாநாட்டு அத்தியாவசிய சேவைகள் தொடர்பான விசேட மாநாட்டிலேயே இவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். தற்போது குடாநாட்டுக்கு கப்பல் மூலம் தனியாரும் பொருட்களை எடுத்து வருகின்றனர். இதனால் பொருட்களின் தட்டுப்பாடு பெரும்பாலும் நீக்கிய போதும் விலைகள் பெரியளவில் குறைக்கப்படவில்லை. (04 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவில் விமானத் தாக்குதல்

(கிளிநொச்சி)

முல்லைத்தீவில் விமானப்படையினர் நடாத்திய குண்டு வீச்சுத்தாக்குதலில் பொதுமன் ஒருவர் காயமடைந்துள்ளார். முல்லைத்தீவு புதுக்குடியிருப்பிலுள்ள மக்கள் குடியிருப்புக்களை அண்மித்த பகுதியில் நேற்று காலை 8.20 மணியளவில் மிக் 27 ரக வானூர்திகள் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தின. இத் தாக்குதலில் புதுக்குடியிருப்பு 9 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த இலங்கேஸ்வரன் பவுஸ்நிலா (வயது 32) என்பவர் காயமடைந்துள்ளார். (ச-5)

## இராணுவத் தீர்வில் கவனம் செலுத்தும்போது சமாதானப் பேச்சுக்கள் சாத்தியமற்றது

### விடுதலைப்புலிகள் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

அரசாங்கம் இராணுவத்தீர்வில் அதிக கவனம் செலுத்தும் போது சமாதானப் பேச்சுவார்த்தைகள் என்பது சாத்தியமற்றது என விடுதலைப்புலிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். தமிழீழ விடுதலைப்புலிகளின் இராணுவப் பேச்சாளர் இ.இளந்திரையன் அமெரிக்க செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அளித்த நேர் காணலிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

பேச்சுக்கள் மூலம் சமாதான ரீதியில் தீர்வை எட்டக்கூடிய நிலையில் அரசாங்கம் இராணுவத் தீர்விலேயே அதிக அக்கறை காட்டி தமது நடவடிக்கைகளைத் தொடர்கின்றது. யுத்த அணுகு (04 ஆம் பக்கம் பார்க்க)

## கொக்கிளாய் களப்புப் பகுதியில் வேவு விமானம் வீழ்ந்து சேதம்

(கொழும்பு)

முல்லைத்தீவு கொக்கிளாய் களப்புப் பகுதியில் அரச வான்படைக்குச் சொந்தமான தானியங்கி வேவு வானூர்தி ஒன்று விழுந்து சேதமாகியுள்ளது. திருகோணமலை-முல்லைத்தீவு கடற்பரப்புக்கு மேலாக நேற்று முற்பகல் 11.30 மணியளவில் இந்த வேவு வானூர்தி வேவுப் பறப்பை மேற்கொண்டு படம் பிடித்துக் கொண்டிருந்தபோது கொக்கிளாய் களப்புக்குள் வீழ்ந்து சேதமானதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை விமானப்படைக்கு வீடியோப் படம் மூலம் வேவுப்பணி செய்யும் ஆட்களற்ற இந்தத் தானியங்கி வேவு விமானம் முதலில் வீழ்ந்ததாக (04 ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்புச் செயலாளருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கு அரசாங்கம் மறுப்பு

(கொழும்பு)

உள்ளூர் ஆங்கில நாளிதழ் ஒன்றின் ஆசிரியருக்கு அச்சுறுத்தல் விடுத்தார் என பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மீது சில ஊடக நிறுவனங்கள் சுமத்தியுள்ள குற்றச்சாட்டை அரசாங்கம் வன்மையாக மறுத்துள்ளதாக தேசிய பாதுகாப்புக்கான ஊடக மையம் செய்தி வெளியிட்டுள்ளது.

அச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் முயற்சியாகவே இந்த போலிக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

கிழக்கில் படையினர் வெற்றிகரமாக மேற்கொண்ட மனிதாபிமான நடவடிக்கைகளில் பாதுகாப்புச் (04 ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வேத் தூதுவர் பிறட்ஸ்கர் திங்கட்கிழமை கிளி.விஜயம்

(கொழும்பு)

இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான் பிறட்ஸ்கர் எதிர்வரும் திங்கட்கிழமை கிளிநொச்சிக்குச் சென்று விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனைச் சந்திக்கவுள்ளார்.

இத் தகவலை இலங்கைக்கான நோர்வேத் தூதரகத்தின் பேச்சாளர் எரிக் நியுபேக் தெரிவித்துள்ளார்.

நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிறட்ஸ்கர் நேற்று முற்பகல் அரசாங்கத்தின் சமாதான குழுத் தலைவர் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவை சுகாதார அமைச்சில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இச் சந்திப்பு வழமையான சந்திப்பென தெரிவித்த (04 ஆம் பக்கம் பார்க்க)

# உலகக் கிண்ணக் கிரிக்கெட் 2007

## பங்களாதேஷ் அணியை வெற்றி பெற்று ஆறுதலடைந்தது மேற்கிந்தியத் தீவுகள் அணி

பங்களாதேஷ் அணியை 99 ஓட்டங்களால் வெற்றி பெற்று ஆறுதலடைந்தது மேற்கிந்தியத் தீவுகள். மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெற்று வரும் உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் நேற்று முன்தினம் பாபடோனில் நடைபெற்ற சூப்பர் 8 ஆட்டத்தில் பங்களாதேஷ்- அவுஸ்திரேலிய அணிகள் மோதின.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

இதனடிப்படையில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி ராம் சர்வானின் சிறப்பான துடுப்பாட்டத்தில் 50 ஓவர்களில் 5விக்கெட்டுக்களையிழந்து 230 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் ராம் சர்வான் ஆட்டமிழக்காமல் 91 ஓட்டங்களையும் சந்தர்போல் 50 ஓட்டங்களையும் பெற்றனர். பதிலுக்கு 50 ஓவர்களில் 231 ஓட்டங்கள்என்ற வெற்றி இலக்குடன் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 43.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 131 ஓட்டங்களையும் மாத்திரம் பெற்று 99 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இதில் ராஹிம் ஆட்டமிழக்காமல் 38 ஓட்டங்களையும் மற்றும் மோட்டார் ஷா 37 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் மேற்கிந்தியத்தீவுகள் அணி சார்பாக பவல் 3 விக்கெட்டுக்களையும் கொலிமோர் பிரவோ மற்றும் ஹைஹல் ஆகியோர் தலா 2விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இவ் வெற்றியின் மூலம் மேற்கிந்தியத் தீவுகள் அணி சொந்த மண்ணில் சூப்பர் 8 ஆட்டத்தில் தனது முதலாவது வெற்றியைப் பெற்று ஆறுதலடைந்தது.

இதுவரை நடைபெற்ற சூப்பர் 8 ஆட்டங்களில் அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, இலங்கை, மற்றும் நியூசிலாந்து அணிகளிடம் தோல்வியடைந்து அரையிறுதிக் குச் செல்லும் வாய்ப்பையிழந்தது. (ச-5)

### கிரிக்கெட்டிலிருந்து லாரா ஓய்வு



உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில்மேற்கிந்தியத் தீவுகள் அணி அரை இறுதி வாய்ப்பை இழந்ததும் லாரா ஒரு நாள் போட்டியில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார். உலகக் கிண்ணத்துடன் அவரது ஒருநாள் ஆட்டம் முடிவதாக அறிவிக்கப்பட்டது.

இந் நிலையில் டெஸ்ட் போட்டியில் இருந்தும் ஓய்வு பெறுவதாக லாரா அறிவித்து உள்ளார். பங்களாதேஷுக்கு எதிரான ஆட்டத்தில் வெற்றி பெற்றதும் அவர் இந்த முடிவை அறிவித்துள்ளார்.

298 போட்டியில் விளையாடி 10 ஆயிரத்து 387 ஓட்டங்களை எடுத்துள்ள லாரா, 19 சதமும் அடித்துள்ளார். அதிகபட்சமாக 169 ஓட்டங்களை எடுத்துள்ளார். 1995 ஆம் ஆண்டு விஸ்டன் விருதையும் பெற்றுள்ளார். (ச-5)

அனுசரணை:-



40 ஆண்டு கால நம்பிக்கை, 43.5 பில்லியன் ரூபாய் சொத்துக்கள், நாடு முழுவதிலும் அரை மில்லியனுக்கும் அதிகமானவர்களின் காப்புறுதித் தேவையைப் பூர்த்தி செய்து தினமும் 12 மில்லியன் ரூபாய்களுக்கு அதிகமான தொகையை இழப்பீடாக அவர்களுக்கு வழங்குகின்றது

SRI LANKA LIFE
வாழ்க்கைக்கு மதிநுட்பமான முதலீடு
Sri Lanka Insurance
ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸிடமிருந்து

## பதிவுகள் மேற்கொள்ளாதவிடத்து புதிய மாணவர்கள் தெரிவு செய்யப்படுவர்

### வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி அறிவிப்பு

(வவுனியா)

தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் தங்களைப் பதிவு செய்துகொள்ளாதவிடத்து காத்திருப்போர் பட்டியிலிருந்து புதிய மாணவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படும் என வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரிப் பீடாதிபதி க.பேர்ணாட் அறிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு,

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரிக்கு 2007 ஆம் ஆண்டுக்கான புதிய அனுமதி தொடர்பான நேர்முகப் பரீட்சைகள் கடந்த ஜனவரி மாதம் முதல் போக்குவரத்துப் பிரச்சினைகள், தபால் விநியோகத் தாமதங்கள் மத்தியிலும் வவுனியா, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய இடங்களில் பல கட்டங்களாக நடாத்தப்பட்டன.

நேர்முகப் பரீட்சை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான கடிதங்கள் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டன. கடந்த மார்ச் 28 ஆம் திகதி தெரிவு செய்யப்பட்ட புதிய மாணவர்களை பதிவு செய்து கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட போதும் இதுவரை அநேகமான மாணவர்கள் தம்மைப் பதிவு செய்து கொள்ளவில்லை.

இதில் யாழ்ப்பாணம்,கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள் அதிகமானவர்களாவர். 2 ஆம் தவணைக்காக நாளை மறுதினம் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி மீண்டும் ஆரம்பமாகவுள்ளதால் அதற்கு முன்னதாகத் தெரிவு செய்யப்பட்ட சகல மாணவர்களும் தங்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தெரிவு செய்யப்பட்டவர்கள் தங்களைப் பதிவு செய்து கொள்ளப்படாதவிடத்துஅவர்களுக்குப் பதிலாகக் காத்திருப்போர் பட்டியலிருந்து புதியவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரிக்கு தகவல் தொழில் நுட்பம் தவிர்ந்த ஏனைய ஆரம்பக் கல்வி, உடற்கல்வி, விவசாயம், இந்து சமயம், கிறிஸ்தவம், விஞ்ஞானம்,உணவுத் தொழில் நுட்பம் ஆகிய பாட நெறிகளுக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு இதுவரை தெரிவுக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன என அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

NEW YEAR SALE



சண்டீவி, ஜெயா டீவி, பொதிகை, சன் நியூஸ் DD ஸ்போட்ஸ் உட்பட 40 சனல்களைக் கண்டு களிக்கக் கூடிய Ku band Dish அன்ரனா சிஸ்டம் மற்றும் கேபிள் ரீவி உபகரணங்கள் மலிவான விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

Ku band Full System Rs.10,000/= இல் இருந்து...

மேலதிக விபரங்களுக்கு:-
சட்ஸ் டெக்,
182, கே.கே.எஸ்.வீதி, கொக்குவில்.
(குளப்பிட்டி சேச் அருகில்)
Phone:- 021 222 5908 / 077 7710785

(819)

## பெறுபேறுகள் இன்று விநியோகம்

பொதுச் சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் இன்று விநியோகிக்கப்படும் என யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் தெரிவித்துள்ளார்.

இப் பரீட்சைப் பெறுபேறுகள் கொழும்பிலிருந்து நேற்று முன்தினம் விமானம் மூலம் எடுத்து வரப்பட்டு கல்வித் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சுமார் 6 ஆயிரம் பரீட்சார்த்திகளுடைய பெறுபேற்றுப் பத்திரங்கள் நேற்று யாழ்.தபால் திணைக்களத்தில் கையளிக்கப்பட்டுள்ளதாகவும் இன்று அவை வழங்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். (ச-3)

## மக்கள் வங்கியின் அடகுப் பிரிவு காலை 7 மணி முதல் இயங்கும்

மக்கள் வங்கி ஸ்ரான்லி வீதிக் கிளையில் அடகு வைக்கும் பிரிவு வார நாள்களில் காலை 7 மணி முதல் பிற்பகல் 3 மணிவரையும் இயங்கும் என கிளை முகாமையாளர் எஸ்.பாலச்சந்திரன் அறிவித்துள்ளார்.

அத்துடன் சனிக்கிழமைகளில் காலை 7 மணிமுதல் நண்பகல் 12 மணிவரையும் அடகுப் பிரிவு இயங்கும் எனவும் ஏனைய பிரிவுகள் வழமையான நேரத்தில் இயங்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ச-5)

## வட்டார மகாநாடு

யெகோவாவின் சாட்சிகளுடைய வட்டார மகாநாடு இன்றும் நாளையும் காலை 9 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ச)

## அருணலு பரிசளிப்பு விழா

கொமர்ஷல் வங்கி சாவகச்சேரிக் கிளையின் அருணலு பரிசளிப்பு விழா இன்று காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது. (ச)

## உணவக உரிமையாளர்களுக்கு இன்று கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

சகல உணவக உரிமையாளர்களுக்குமான கலந்துரையாடல் இன்று காலை 10 மணிக்கு யாழ். வணிகர் கழகப் பணிமனையில் நடைபெறவுள்ளது. (ச)

## உணவு விநியோகம் தொடர்பான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தற்போதுள்ள உணவுப் பொருள் விநியோகம் தொடர்பாக அவசர கலந்துரையாடல் ஒன்று நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மாவட்டச் செயலகத்தில் அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் சகல பலநோக்குக் கூட்டுறவுச் சங்க தலைவர், பொதுமுகாமையாளர் மற்றும் பிரதேச செயலர், உதவி அரசாங்க அதிபர்களைக் கலந்து கொள்ளுமாறு அரசாங்க அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார். (ச)

## கலாசாரக் குழுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கலாசாரப் பேரவையின் கலாசாரக் குழுக் கூட்டம் இன்று காலை 10 மணிக்கு யாழ். செயலகத்தில் அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் செயற்குழு உறுப்பினர்களை தவறாது கலந்து கொள்ளும்படி மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி கேட்டுள்ளார். (ச)

## கந்தபுராணம் படிப்பு ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி அருள் மிகு தேவஸ்தானம் ஸ்ரீ விநாயகர் ஆலயத்தில் கந்தபுராணம் முற்றுப் படிப்பு பயன் கூறும் நிகழ்வு இன்று காலை 10 மணியளவில் ஆரம்பமாகி தொடர்ந்து மூன்று மாதங்கள் நடைபெறும். (ச-102)

### மணமகன் தேவை

இந்து வேளார் இனத்தைச் சேர்ந்த 7இல் செவ்வாய்,பூசம் 3 ஆம் பாதம், 74 ஆம் ஆண்டு பிறந்த A/L வரை படித்த மணமகளுக்கு டாக்டர், எஞ்சினியர் பட்டதாரி மணமகன் தேவை.

தொடர்பு:- ஸ்ரீராஜ், சம்பந்தர் வீதி, வட்டுக்கோட்டை.

T.P.No:- 021 4591358 (C-018)

### மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த வயது 29. ரோகிணி 3 ஆம் பாதம். செவ்வாய்க்குற்றமற்ற 9 பாவகிரகமுடைய *Com.Eng* ஆணுக்கு படித்த அழகிய மணமகள் தேவை. நேரில் தொடர்பு கொள்ளவும்.

விலாசம்:- விஜயகாந்தன், குளங்கரை ஒழுங்கை (ரெயில் றோட்), கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

தொலைபேசி:- 021 222 9722 (C-019)

## அழைப்புக் கட்டளை

(இல. 16- பிரிவு 55 (1))

யாழ்ப்பாணம் என்னுமிடத்திலுள்ள/மாவட்ட நீதிமன்றத்தில்

சின்னத்தம்பி ஜோதீஸ்வரன்
பெண் அமிர்தலிங்கம் மகள் தயாவதி
17/10 கச்சேரி கிழக்கு ஒழுங்கை
யாழ்ப்பாணம்.

வழக்காளி

வழ.இல. மணநீக்கம்/763

எதிர்

சின்னத்தம்பி ஜோதீஸ்வரன்
மே/பா.தா.சிவராஜா
நாகர்கோவில் கிழக்கு
நாகர்கோவில்.

எதிராளி

மேலே பெயர் குறிப்பிட்டுள்ள எதிராளி

மேலே பெயர் குறிப்பிட்டுள்ள வழக்காளி தமக்கும் உமக்குமிடையேயுள்ள திருமணத்தை ரத்துச் செய்ய இந் நீதிமன்றத்தில் உமக்கு எதிராக வழக்குத் தொடர்ந்துள்ளாராதலினால் அதற்கு உமது மறுமொழி ஏதேனும் இருப்பின், 2007 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 10 ஆம் நாள் அன்று, அல்லது அதன் முன்னர் நீதிமன்றத்தில் கோப்பிடும்படி இத்தால் நீவிர் தேவைப்படுத்தப்படுவதோடு சொல்லப் பட்ட தேதியன்று அல்லது அதன்முன்னர் நீவிர் மறுமொழி கோப்பிடத் தவறும் சந்தர்ப்பத்தில் வழக்கானது மறுகட்சிக்காரர் இல்லாமலே மேற்கொண்டு நடத்தப்பட்டு விளங்கப்படும் என அறிந்து கொள்ளுமாறு நீவிர் இத்தால் தேவைப் படுத்தவும்படுகின்றீர்.

பதிவு பெற்ற தரணியின் மூலம் நீர் தோன்றாவிடில் சட்டமுறையான எல்லா அறிவித்தல்களும் சேர்ப்பிக்கப்படக் கூடிய முகவரி ஒன்றை கூறும் விபரக் குறிப்பொன்றை கோப்பிடுமாறு நீவிர் மேலும் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக் கட்டளைப்படி
து.சிறீமோகன்
பதிவாளர்
மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்.

வரைபு
பவானி சற்குணராசா
வழக்காளியின் சட்டத்தரணி

*குறிப்பு :-* விளக்கத் தேதியை நிர்ணயிப்பதற்காக பகிரங்க நீதிமன்றத்தில் இவ்வழக்கு ஏற்படும் தேதி பற்றிய அறிவித்தலை நீவிர் பெற விரும்பினால், பதிவு செய்யப்பட்ட முகவரி ஒன்றை இந் நீதிமன்றப் பதிவாளரிடம் கொடுத்துதவு மாறும், பதிவஞ்சல் மூலம் அனுப்பி வைப்பதற்காகும் செலவை மேவுவதற்கு தேவைப்படும் முத்திரைகளை கொடுக்குமாறும், 80 ஆம் பிரிவின் மூலம் நீவிர் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

2007 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 16 ஆந் நாளாகிய இன்று.

(832)

தேவை ஏற்படாதவரை நண்பனைத் தெரிந்து கொள்ள முடியாது.

–அப்துர் றஹீம்

வலம்புரி

# எதிர்க்கட்சிகளின் காத்திரமான நடவடிக்கை தேவை

நாட்டில் நிலவும் இனப்பிரச்சினைக்கு சமாதான வழியில் தீர்வு காண்பதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்வதில் எதிர்க்கட்சிகளின் காத்திரமான நடவடிக்கைகள் தேவையாகவுள்ளன.

யுத்தத்தினால் மனித உரிமைகள் உள்ளிட்ட சமூக, பொருளாதார, கலாசார விழுமியங்கள் அனைத்தும் அதலபாதாளத்திற்குச் சென்று விட்டது.

இலங்கையின் எதிர்காலம் இருள்மயமாகத் தெரியும் நிலையில், எதிர்க்கட்சிகள் தமது அரசியல் இலாபத்தை மட்டும் கருத்தில் கொள்ளாமல் நாட்டின் நலனையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

உதாரணமாக எதிர்க்கட்சித் தலைவரைக் கைது செய்வதற்கு அரசு திரைமறைவில் நடவடிக்கை எடுப்பதாக எழுந்துள்ள குற்றச்சாட்டுக்கள் இங்கு நோக்குதற்குரியது.

அதாவது எதிர்க்கட்சித் தலைவரைக் கைது செய்யும் அரசியல் சதி என்பது ஜனநாயகத்தின் வீழ்ச்சியிலிருந்து எழக் கூடியதாகும். ஜனநாயகம் முழுமையாக கடைப்பிடிக்கப்படாத பட்சத்தில் அரசியல் பழிவாங்கல் நடவடிக்கைகள் மேலோங்குவது சர்வசாதாரணமாக இடம்பெறக் கூடியதாகும்.

ஜனநாயக வீழ்ச்சி என்பதன் ஆரம்பம் பொது மக்கள் மீதான கெடுபிடி, மனித உரிமை மீறல் - இனம், மொழி மற்றும் சமயப் பாகுபாடு என்பவற்றிலிருந்து ஆரம்பிக்கின்றது.

இவ்வாறு சாதாரண மனிதர்கள் மீதான கெடுபிடிகளுக்காகக் குரல் கொடுக்காத நிலையில் அதன் வளர்ச்சி எதிர்க்கட்சி உறுப்பினர்களையும், அரசுக்கு எதிரான கருத்துடையவர்களையும் கைது செய்வது, பழிவாங்குவது, அபத்தமான குற்றச்சாட்டுக்களை முன்வைப்பது என்றவாறு அநீதிகள் நடைபெறும்.

அப்போது எதிர்க்கட்சிகள் விழித்துக் கொள்வதால் எதுவுமே நடந்து விட மாட்டாது. சிறிபதி சூரியாராட்சியை கைது செய்தபோது அதற்கான விளக்கங்களை எதிர்க்கட்சிகள் கோரியிருக்க வேண்டும்.

எனினும் சூரியாராட்சி ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர் என்ற வகையில் அவருக்கான குரல் கொடுப்பில், எதிர்க்கட்சிகள் பின்னடித்தன.

ஆனால் இப்போது எதிர்க்கட்சித் தலைவரைக் கைது செய்யும் நடவடிக்கையில் அரசு ஈடுபட்டுள்ளதாக கோஷம் போடப்படுகின்றது. இது காலம் கடந்த ஞானமாகும்.

அதற்கு முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவுக்கு ஏற்பட்ட நிகழ்வு நல்லதோர் படிப்பினையாகும். அதாவது பொருத்தமற்ற ஒருவரை ஜனாதிபதியாக வருவதற்காகத் தான் பாடுபட்டது தவறானது என மங்கள சமரவீர இப்பொழுது கூறுகின்றார்.

அப்படியானால் அவர் தான் விட்ட தவறைத் தனக்கு அநீதி இழைக்கப்படும்போதுதான் உணர்கிறார் அல்லவா?

இத்தகைய சுயபாதிப்பு அனுபவங்கள் நாட்டிற்கும் மக்களுக்கும் உதவ மாட்டாது என்பது உணரப்பட வேண்டியதாகும்.

# மனித உரிமை மீறல்களைக் கட்டுப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்

## ஐக்கிய தேசியக் கட்சி வேண்டுகோள்

(கொழும்பு)

அரசாங்கம் நாட்டில் இடம்பெற்று வரும் மோசமான மனித உரிமை மீறல்களை நிறுத்துவதனை விட்டுவிட்டு அனைத்துலக இராஜதந்திரிகளைக் குற்றம் சுமத்துவது தவறானது என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

பாதுகாப்பு விவகாரங்களுக்கான பேச்சாளரும் அமைச்சருமான ஹெகலிய ரம்புக்வெல கடந்த புதன்கிழமை இராஜதந்திரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கு பதிலளிக்கும் முகமாகவே ஐக்கிய தேசியக் கட்சி இதனைத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அக் கட்சியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான லக்ஷ்மன் கிரியெல்ல ஊடகத்துறையினருக்கான மாநாட்டில் தெரிவித்ததாவது,

சர்வதேச இராஜதந்திர வட்டாரங்கள் மனித உரிமை மீறல்கள் தொடர்பாகவே கவனம் செலுத்துகின்றது. ஏனெனில் அரசாங்கம் அதனைத் தடுத்து நிறுத்த முயற்சிக்கவில்லை. அரசாங்கம் ஐக்கிய நாடுகள் சபையில் மனித உரிமை விதிகளுடன் ஏற்படுத்திக் கொண்ட உடன்பாட்டுக்கு அமைய மனித உரிமைகள் மதிக்கப்பட வேண்டும். எந்தவிதமான மன்னிப்புக்கள் மூலமும் அரசாங்கம் அதன் பொறுப்பிலிருந்து தப்பமுடியாது.

சர்வதேச கிரிக்கெட் சபையின் விதிகளிலிருந்து விலகி நாங்கள் கிரிக்கெட்டை விளையாட முடியாது. அதைப்போலவே சர்வதேசத்தினால் அங்கீகரிக்கப்பட்ட விதிகளை நாம் மதிக்க வேண்டும். மனித உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும்.

அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் மனித உரிமை மீறல்களில் ஈடுபடுவதாகவே சர்வதேச நாடுகள் குற்றஞ்சுமத்தியுள்ளன. எமது ஆட்சிக்காலத்தில் மனித உரிமை மீறல்களுக்கு விடுதலைப்புலிகளே காரணமாக இருந்தனர். ஆனால் இன்று அரசாங்கமும் அதற்கு பொறுப்பாகவுள்ளது.

இந்த மோசமான மனித உரிமை மீறல்கள் தொடர்பாக சில வழக்கறிஞர் சங்கங்களின் தலைவர்களும் பொது அமைப்புக்களும் மௌனமாக இருக்கின்றனர். தாம் தற்போது அனுபவிக்கும் பதவிகளையும் வாழ்க்கையையும் இழந்து விடக் கூடாது என்பதற்காக சில புத்திஜீவிகளும் கல்விமான்களும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக செவிடர்களாக, ஊமைகளாக, குருடர்களாக இருக்கின்றனர்.

இந்தியா போன்ற நாடுகளில் சட்டவியலாளர்களே அநீதிகளுக்கு எதிராக முன்னிலையில் நிற்பவர்கள். அவர்கள் வீதிகளில் இறங்கிப் போராட தயங்குவதில்லை என்றார் அவர்.(ச)

# தடை செய்யப்பட்ட ஆயுதங்களை இந்தியா இலங்கைக்கு வழங்கியது!

பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்களை இலங்கைக்கு வழங்குவதில்லை என்ற உறுதிமொழியை மீறி இந்திய மத்திய அரசாங்கம் உயர் ரக வெடிமருந்து மற்றும் ரி.பி.ரி.வகை 40 மி.மீ. எறிகணை செலுத்திகளுக்குரிய குண்டுகள் உட்பட பெருந்தொகையான பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்களை இலங்கைக்கு வழங்கியுள்ளது.

மத்திய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் தமிழ்நாட்டு அரசாங்கத்தின் கோரிக்கைகளையும் மத்திய அரசாங்கம் இதன் மூலம் புறக்கணித்துள்ளது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கண்ணி வெடி பாதுகாப்பு வாகனங்கள், வாராகா என்ற கரையோர ரோந்துக் கப்பல், 40மி.மீ.எறிகணை செலுத்திகளுக்கான குண்டுகள், உயர் ரக வெடிபொருள்கள், பாதுகாப்பு உடைகள், குண்டு துளைக்காத உடல் கவசங்கள், பிளாக் உடைகள், பாதுகாப்புத் தலைக் கவசங்கள், குண்டு பாதுகாப்பு வாகனங்கள், 25 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான உறைநிலைக் கொள்கலன்கள், சிறிய உழவு இயந்திரங்கள், குண்டு துளைக்காத வாகனங்கள், இரவுப் பார்வை சாதனங்கள், கண்ணி வெடி பாதுகாப்பு வாகனங்கள், 3மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான தொலைத் தொடர்பு சாதனங்கள், இவற்றில் இனரெல் பி–4 கணனிகள், அவற்றுடனான யு.எஸ்.பி., உயர் அலைவரிசை கொண்ட தொடர்பு சாதனங்கள், மின்நிறுத்த பலகைகள், பாதுகாப்பான தளங்கள், யு.எச்.எஃப் கையடக்க சாதனங்கள் என்பவற்றையே இந்திய அரசு இலங்கைக்கு இரகசியமாக வழங்கியுள்ளது.

இந்தியாவும் பாகிஸ்தானும் போட்டிக்கு ஆயுதங்களை இலங்கைக்கு வழங்கி அப்பாவித் தமிழ்மக்கள் மீது நடாத்தப்பட்டு வரும் கொடூரமான போரை ஊக்குவித்து வருவது மிகவும் வருந்தத்தக்கது என அவதானிகள் இது தொடர்பாக கருத்துத் தெரிவித்துள்ளனர். (எ–5)

# வடக்கு - கிழக்குத் துயரங்களை எண்ணி மே தினத்தை அமைதியாகக் கொண்டாடுவோம்

## அகில இலங்கை தேசிய தொழிலாளர் முன்னணி வேண்டுகோள்

(கொழும்பு)

இன்று நம் நாட்டில் நிலவி வரும் யுத்த சூழ்நிலை காரணமாக தினம் தினம் மக்கள் துன்பப்பட்டு வரும் சூழலே தொடர்கின்றது. நமது வடக்குக் கிழக்கில் வாழும் சகோதரர்கள் படும் துன்பங்களைப் பார்க்குமிடத்து நாம் அனுபவிப்பவை எல்லாம் பெரும் துன்பங்களாகத் தெரியவில்லை.

எனவே தினம் தினம் துயருறும் நம் சகோதரர்களை எண்ணி மே தினத்தை அமைதியான முறையில் அனுஷ்டிப்போம் என அகில இலங்கை தேசிய தொழிலாளர் முன்னணி வேண்டுகோள் விடுத்துள்ளது.

அதன் தலைவர் ஐயாசாமி இராமலிங்கம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

நாட்டில் அன்றாடம் பல தமிழர்கள் கடத்தப்பட்டு வருகின்றார்கள். பலர் பட்டப்பகலிலேயே நடுத்தெருவில் வைத்துச் சுட்டுக் கொல்லப்படுகின்றார்கள். இந் நிலையில் வடக்குக் கிழக்கு மக்கள் அன்றாடம் பசிப்பட்டினியுடன் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வருகின்றனர்.

பிள்ளைகளையிழந்த பெற்றோர்களின் தொகையும் கணவன்மாரையிழந்த மனைவிமார்களின் தொகையும் குடாநாட்டில் பெருகிக் கொண்டு வருகின்றது. யுத்தம் காரணமாகப் பலர் அங்கவீனர்களாகி வருகின்றனர். அப்பாவி மனித உயிர்கள் விலை மதிப்பின்றி காவு கொள்ளப்படுகின்றது.

எனவே நிலைமை இவ்வாறிருக்கையில், மே தினத்தன்று கோஷம் எழுப்புவதாலும் களியாட்ட நிகழ்வுகளை ஏற்பாடு செய்து களிப்புற்று மகிழ்வதாலும் நன்மை விளையப் போவதில்லை.

வடக்குக் கிழக்கில் துயருறும் எமது சகோதரர்களின் துன்பத்திலும் நாமும் பங்கேற்க வேண்டும். இந்நாட்டில் சகல இன மக்களும் சமாதானத்துடனும் சௌஜன்யத்துடனும் வாழும் காலம் விரைவில் உதயமாக வேண்டும்.

எனவே எமது நாட்டில் சமாதானம் மலர வேண்டுமென்று மே தினத்தன்று ஆலயங்களில் வழிபாடுகளிலும் பிரார்த்தனைகளிலும் அகில இலங்கை தேசிய தொழிலாளர் முன்னணியின் அங்கத்தவர்கள் ஈடுபடுவர் என்றார். (ச–5)

# உள்ளூர்த் தபால் கட்டணங்கள் 27 ஆம் திகதியிலிருந்து மாற்றம்

(கொழும்பு)

உள்ளூர் தபால் கட்டணங்களில் எதிர்வரும் 27 ஆம் திகதியிலிருந்து மாற்றங்கள் ஏற்படுத்தப்படவுள்ளதாக தபால் மா அதிபர் சேவின் சேனாதீர தெரிவித்துள்ளார். தபால் திணைக்களத்தின் அதிகரித்த செலவீனம் காரணமாகவே தபால் கட்டணங்களில் மாற்றங்களைக் கொண்டு வர வேண்டியுள்ளதாகத் தெரிவித்த அவர், உள்ளூரில் ஒவ்வொரு கடிதப் போக்குவரத்திலும் அரசாங்கம் 8 ரூபா நட்டத்தினை எதிர்நோக்குவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

புதிய திருத்தங்களுக்கு அமைய வர்த்தகத் தபால் சேவை ஒன்றும் அறிமுகப்படுத்தப்படும் என்றும் சேனாதீர குறிப்பிட்டார். இதேவேளை 5 ரூபா தபால் கட்டணத்தில் எவ்வித மாற்றங்களும் மேற்கொள்ளப்பட மாட்டாது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச–3)

# கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் நடைபெறவுள்ளது. கடந்த 17 ஆம் திகதி யாழ்ப்பாண உதவிப் பிரதேச செயலர் மரியதாசன் தலைமையில் நடைபெற்ற யாழ். பிரதேச செயலகத்திற்குட்பட்ட கழகங்களுக்கிடையிலான கூட்டத்தின்போது விளையாட்டுப் போட்டி நடாத்துவது குறித்துத் தீர்மானிக்கப்பட்டது.

கடந்த மாதம் 15 ஆம் திகதி நடைபெறவேண்டிய இப்போட்டிகள் குடாநாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையைத் தொடர்ந்து காலம் தாழ்த்தப்பட்ட நிலையில் நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச–3)

# க.பொ.த. உயர் தரப் பரீட்சைக்கு புதிய 4 பாடங்கள் அறிமுகம்

(கொழும்பு)

இவ்வருடம் கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்கு புதிதாக 4 தொழில்நுட்பப் பாடங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகப் பரீட்சைத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் அநுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

சிவில் எஞ்சினியறிங், இலத்திரனியல் பாடம், உணவு மற்றும் விவசாயப் பாடங்கள், உயிரியல் பரிவர்த்தனைப் பாடம் ஆகிய தொழில்நுட்பப் பாடங்களே இவ்வாறு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

கலைப் பிரிவைச் சேர்ந்த மாணவர்களும் இப்பாடங்களைக் கற்க முடியும். (ச–3)

# இலங்கை ஊடகவியலாளர்களின் பாதுகாப்புத் தொடர்பாக பிரிட்டன் கவனம் செலுத்துகிறது

(கொழும்பு)

இலங்கையின் ஊடக சுதந்திரம் மற்றும் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு தொடர்பாக பிரிட்டன் அரசாங்கம் மிகவும் அவதானத்துடன் இருப்பதாகவும் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கு தயாராகி வருவதாக இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் டொமினிக் சில்கொட் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவினால் டெய்லிமிரர் பத்திரிகையின் ஆசிரியர் சம்பிக்க லியனாராட்சிக்கு விடுக்கப்பட்ட மிரட்டல் தொடர்பாக ஆராய்வதற்காக பத்திரிகை நிறுவனத்திற்குச் சென்றிருந்த சந்தர்ப்பத்திலேயே அவர் இந்த கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் ஊடக சுதந்திரத்தை பாதுகாப்பதற்காக தேவையான சந்தர்ப்பத்தில் நடவடிக்கைகளை எடுப்பதற்கு பிரித்தானிய அரசாங்கம் தயார் எனவும் இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் தெரிவித்துள்ளார்.

டெய்லிமிரர் ஆசிரியருக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தலை பாரதூரமானதொன்றாக பிரித்தானிய அரசாங்கம் கருதுவதாகவும் இலங்கையில் ஊடக சுதந்திரத்தினையும் இறைமையினையும் பாதுகாப்பதற்காக தமது அரசாங்கம் பின் நிற்கப்போவதில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ச)

# விடுதலைப்புலிகளிடமிருந்து அரசாங்கம் நேர்மைத்தன்மையை எதிர்பார்க்கிறது

## ஊடகத்துறை அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கும் எண்ணத்தை கொண்டிருப்பார்கள். ஆனால் அவர்களிடம் நேர்மைத் தன்மையை அரசாங்கம் எதிர்பார்ப்பதாக ஊடகத்துறை அமைச்சர் லக்மன் யாப்பா அபயவர்த்தன தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் தோல்வியை சந்திக்கும் வேளையில் மாத்திரமே சமாதானப் பேச்சுவார்த்தைகளில் ஆர்வம் கொள்கின்றனர். சமாதானப் பேச்சுவார்த்தைகளில் தமிழீழ விடுதலைப்புலிகள் ஈடுபாடுகாட்டும் பட்சத்தில் அதனை உத்தியோக பூர்வமான முறையில் அரசாங்கத்திற்கும் அறிவிக்க வேண்டும் எனவும் ஊடகத்துறை அமைச்சர் மேலும் கூறியுள்ளார்.

இந் நிலையில் அவர்கள் அதனை உறுதி செய்யும் பட்சத்தில் போர்நிறுத்த ஒப்பந்தத்தை மீண்டும் அமுலுக்கு கொண்டுவர முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். இதற்கு சர்வதேச சமூகமும் தமது முழுமையான ஆதரவினை வழங்கும் எனவும் அமைச்சர் லக்மன் யாப்பா அபயவர்த்தன கூறினார். (ச-3)

# வவுனியாவில் துப்பாக்கிச்சூடு

(வவுனியா)

வவுனியா திருநாவற்குளப் பகுதியில் ஆயுததாரிகளின் துப்பாக்கிச் சூட்டுக்கு இளைஞர் ஒருவர் உயிரிழந்ததோடு மேலும் இரு இளைஞர் காயமடைந்துள்ளனர். நேற்று முன்தினம் இரவு மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞர்கள் மீதே ஆயுததாரிகள் துப்பாக்கிச் சூட்டை நடத்தியுள்ளனர். இதில் ஒருவர் கொல்லப்பட்டதுடன் மேலும் இருவர் படுகாயமடைந்துள்ளனர். (ச-3,5)

## கொக்கிளாய் களப்புப்...

படைத்தரப்புத் தகவல் வெளியிட் டுள்ளது. ஆனால் நேற்று பிற்பகல் கோளா றுக்குள்ளான வேவு வானூர்தி தமது கட்டுப்பாட்டு நிலையம் மூலம் தரையிறக்கப்பட்ட தாக படைத்தரப்புத் தெரிவித்த போதும் வேவு வானூர்தி வீழ்ந்து சேதமாகியுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமிழ் மக்களால் வண்டு என அழைக்கப்படும் இந்த வேவு வானூர்திகளில் ஒன்று முன்னர் வன்னி கனகராயன்குளம் விஞ்ஞானகுளத்தில் வீழ்ந்து நொருங்கியுள்ளது.

இலங்கை வான்படைத் தாக்குதலுக்கு முக்கிய ஆதாரமாக இருக்கும் இந்த ஆளற்ற வானூர்திகள் இஷ்ரேல் தயாரிப்புக்கள் என்பது குறிப் பிடத்தக்கது. (ச-3,5)

## நோர்வேத் தூதுவர்...

நோர்வேத் தூதரகப் பேச்சாளர் இதன்போது நாட்டில் நிகழும் அசாதாரண சூழ்நிலைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டதாக கூறினார். இச் சந்திப்பினைத் தொடர்ந்து பிறட்ஸ்கர் நாளை மறுதினம் திங்கட்கிழமை கிளிநொச்சிக்குச் சென்று விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனைச் சந்திக்கவுள்ளதாக அரச சமாதானக் குழுத் தலைவர் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவைச் சந்தித்த பின் பிறட்ஸ்கர் கிளிநொச்சிக்குச் செல்லவுள்ளதால் பேச்சுவார்த்தை குறித்து அரசின் கடிதத்துடன் அவர் கிளி நொச்சிக்குச் செல்வதாக அவதானிகள் தெரி வித்துள்ளனர். (ச-3)

## இராணுவத் தீர்வில் கவனம்...

முறையில் அரசு நாட்டம் கொண்டுள்ள போது உடனடியாக பேச்சுக்கள் மூலம் தீர்வு எட்டுவது சாத்தியமற்றது எனவும் இளந்திரையன் சுட்டிக்காட்டினார்.

பேச்சுவார்த்தைக்கு நுழையும் வாசலாக போர் நிறுத்த உடன்படிக்கை இருக்கும் போது அரசாங்கம் சுவர் ஊடாக நுழைய முன்படுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

அரசாங்கம் இராணுவ நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் அணுகும் போது அதனை எதிர்கொள்வதைத் தவிர விடுதலைப் புலிகளுக்கு வேறு தெரிவு இல்லை என்பதையும் இளந்திரையன் தெரிவித்துள்ளார். (ச-5)

## பாதுகாப்புச் செயலாளருக்கு...

செயலாளர் அளப்பரிய பங்கை வகித்த போதிலும் கட்டுநாயக்கா விமானத் தளத்தின் மீது புலிகள் மேற்கொண்ட விமானத் தாக்குதலையடுத்து அவர் உடனடியாக பதவி விலகவேண்டுமென சில சக்திகள் குரல் கொடுத்தன.

பாதுகாப்புச் செயலாளருக்கு எதிராக இப்போது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு விடுதலைப்புலிகளை திருப்திப்படுத்துவதாக திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதொன்றாகவே அரசாங்கம் கருதுகின்றது.

விடுதலைப்புலிகளுக்கு எதிராக அரசாங்கம் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளில் படையினர் பல வெற்றிகளை அடைவதற்கு பாதுகாப்புச் செயலாளர் பெரும் பணியாற்றியுள்ளார். இந்த நிலையில் பாதுகாப்புச் செயலாளரை பதவியிலிருந்து நீக்கும் முயற்சியாகவே இப் போலியான குற்றச்சாட்டு முன் வைக்கப்பட்டுள்ளது என்றும் அச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-5)

## பொருட்களுக்கான விற்பனை...

இந் நிலையில் கப்பலில் எடுத்து வரப்படும் பொருட்களுக்கான விற்பனை விலைகள் ஒரு வாரத்தில் நிர்ணயிக்கப்படும் எனக் குறிப்பிட்டார். தனியாருக்கு பொருட்களை கொழும்பிலிருந்து கப்பலில் எடுத்துவருவதனை ஒழுங்குபடுத்தியவர்த்தக கைத் தொழில் விவசாய சமாசங்களின் கூட்டமைப்பு தனியார் வர்த்தகர்களினால் கொண்டுவரப்பட்ட பொருட்களின் விலையை நிர்ணயிப்பதற்கு ஒருவாரகால அவகாசம் கேட்டுள்ளதாகவும் அவர்களின் முடிபையடுத்து விலைகள் நிர்ணயிக்கப்படு மெனவும் அரச அதிபர் கே.கணேஷ் குறிப்பிட்டார்.

இதேவேளை அரச கப்பல்களில் உணவுப் பொருட்கள் மட்டும் எடுத்து வரப்படவுள்ளமையால் சகல திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள் தமக்குத் தேவையான பொருட்களை தனியார் கப்பல்களில் எடுத்துவர ஒழுங்கு செய்யுமாறு அரச அதிபர் தெரிவித்தார். (ச-5)

## இராணுவத்...

நாட்டை அடுத்து பலாலி மருத் துவமனைக்குச் சென்ற சரத் பொன்சேகா காயமடைந்த படை வீரர்களை பார்வையிட்ட தைத் தொடர்ந்து 51 ஆவது படைத் தளத்திற் குச் சென்று கீழ்நிலை அதிகாரிகளைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். (ச-5)

## வெருகலாற்றுப் பகுதிக்கு...

ஆண்டுகளுக்கு முற்பட்ட எழுத்து வடிவங்களை பார்வையிட்டார்.

மேலும் இது தொடர்பாக உடனடியாக மொழிபெயர்ப்புக்களை மேற்கொள்ளுமாறு புவியியல் திணைக்களத்திற்குத் தெரிவித்துள்ளார். கிழக்கு மாகாணத்தின் பிரதம சங்கநாயக்க மற்றும் சேருவில மங்கள ராஜ விகாரையின் பிரதம குருவான தமன்கடுவ ஆகியோர் நீதியரசரை ஆசீர்வதித்ததுடன் 800 வருடங்களின் பின்னர் உயர் நீதித்துறை அதிகாரி இங்கு பயணம் செய்துள்ளதாக வண சேருவில சரநாகிட்டிய தேரர் தெரிவித்தார்.

இப் பயணத்தின்போது கருத்துத் தெரிவித்த நீதியரசர் எல்லா இனங்களும் ஒன்று சேரவேண்டும் எனவும் இந்த பிரதேசத்தை அதி கூடிய பாதுகாப்புக்களைக் கொண்டு பாதுகாக்க வேண்டுமெனவும் கூறினார். (ச)

## விடுதலைப்புலிகள்...

விடுதலைப்புலிகள் மீது தமது அரசாங்கம் தடைகளைக் கொண்டு வரும் எனவும் பயங்கரவாத நடவடிக்கை களை தடுப்பதற்கு தம்மால் முடிந்த நடவடிக் கையை எடுப்போம் எனவும் தமது அரசாங் கம் விடுதலைப்புலிகளை பயங்கரவாத அமைப்புக்களின் பட்டியலில் விரைவில் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் எனவும் தெரிவித்துள்ளார். (ச-5)

## பேச்சுவார்த்தையை ...

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று வத்திக்கானில் பாப்பரசர் 16 ஆவது பெனடிக்கை சந்தித்துப் பேசினார். அத்துடன் கார்டினல் செபலரையும் ஜனாதிபதி சந்தித்துள்ளார்.

இந்தச் சந்திப்பு தொடர்பாக வத்திக்கான் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இந்த சந்திப்பின் போது இலங்கையில் தற்போது நிலவும் சூழலில் மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்கப்பட வேண்டும் என்ற செய்தி வலியுறுத்தப்பட்ட தாகவும் பேச்சுவார்த்தையும் சமரச முயற்சிகளும் தான் இலங்கையில் நடக்கும் வன்செயல்களை முற்றாக நிறுத்த ஒரே வழி என்றும் கூறப்பட்டது.

இலங்கைச் சமூகத்தில் குறிப்பிடத்தக்க பங்கையளித்து வரும் கத்தோலிக்கத் திருச்சபை எல்லோருக்கும் நன்மை ஏற்பட வேண்டும் என்ற நோக்கிலும் அமைதி மற்றும் நல்லிணக்க நடவடிக்கைகளுக்காக ஒருமித்த கருத்தை ஏற்படுத்துவதற்காக தான் மேற்கொண்டு வரும் பணிகளை மேலும் தீவிரப்படுத்தும் என்றும் வத்திக்கானின் அறிக்கை கூறியுள்ளது.

தன்னார்வக் குழுக்கள் சில இலங்கைப் பிரச்சினை குறித்து வெளியிட்ட கவலைகளுக்குப் பிறகு இலங்கை ஜனாதிபதிக்கும்-பாப்பரசருக்கும் இடையேயான இந்தச் சந்திப்பு நிகழ்ந்துள்ளது.

இதனிடையே வத்திக்கான் இராஜாங்க செயலாளரை சந்தித்தும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பேச்சுவார்த்தையை நடத்தியுள்ளார்.

இவ் சந்திப்பின்போது இலங்கையின் எதிர்கால சமாதான முன்னெடுப்புக்கள் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டது. இதன்போது தெரிவித்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இலங்கையில் காணப்படுவது யுத்தமே தவிர இனப்பிரச்சினையல்ல என வத்திக்கான் இராஜாங்கச் செயலாளருக்கு சுட்டிக் காட்டியுள்ளார்.

மன்னார் மடு தேவாலயத்தில் வெளிப் பிரதேச யாத்திரிகள் சென்று வருவதற்காக புதிய செயல் திட்ட மொன்றையும் ஆரம்பிக்கவுள்ளதாகவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மேலும் கூறியுள்ளார். (ச-3,5)


நீத்தார் நினைவு அழைப்பு



அமரர் சிவஞானம் இராஜேஸ்வரன்

05.04.2007 ஆம் திகதி வியாழக்கிழமை அமரத்துவமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் சிவஞானம் இராஜேஸ்வரனின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் மதிய போசனமும் இன்று (சனிக்கிழமை) பகல் 11 மணியளவில் நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் நடை பெறும். இந் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

105, கலைமகள் வீதி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.

மனைவி,
பிள்ளைகள்.

(C-017)

தரம்: 05 புலமைப் பரிசில்

அதிபர்களே, ஆசிரியர்களே, பெற்றோரே உங்கள் பிள்ளைகள் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற இன்றே...

திரு.கணேசலிங்கம் அவர்களின்

வெற்றித்தேர்வு-1 முதல் 25 வரை செய்யத் தவறாதீர்கள்.

வெற்றித்தேர்வு - 08 இன்று
வெற்றித் தேர்வு - 09 - 25.04.2007
வெற்றித் தேர்வு - 10 - 02.05.2007

*கேட்டுப் பெறுங்கள்:-*

விமானம் மூலம் வினாப்பத்திரம் வருவதால் உடன் பெறுங்கள். விலையில் எவ்வித மாற்றமுமில்லை.

கிடைக்கும் இடங்கள்

- பூபாலசிங்கம் - யாழ்.நகர்
- மொடேன் - நெல்லியடி
- துர்க்கா - சுன்னாகம்
- குகன் கல்வி நிறுவனம் - ஆவரங்கால்
- விநாயகர் கொமினிகேசன் - தாவடி
- சயன்ஸ் அக்கடமி - நல்லூர்
- நியூ மற்ஸ் அக்கடமி-சாவகச்சேரி

(833)




CB Computer Academy
Station Road, Kondavil. ☎-021-4590291


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ.ஸ்தாபனத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.04.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.